DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.90/2024**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.4

Defence

Court

Name : சாமிநாதன்
Father/ Husband Name : கருப்பன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 06.09.2024.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் தச்சவயலில் குடியிருந்த வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 08.08.2018ம் தேதி மதியம் 01.45 மணியளவில் கண்ணம்மாள்மண்டபம் அருகே எனது மகனை அடிப்பதாக சொன்னார்கள். நான் வீட்டிலிருந்து வந்துகொண்டிருந்தேன். ஒரு பொன்னு ஓடிவந்து எனது மகனை அடிப்பதாக சொன்னார்கள். அதன்பின்னர் நான் போய் பார்த்தேன். என்னை அடித்துவிட்டார்கள். நான் கீழே சாய்ந்து விட்டேன். பின்னர் தேவகோட்டை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டார்கள். இரண்டு போனை பறித்துவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**3வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். என்னை யாரும் அடிக்கவில்லை

என்றும், தள்ளிவிடவில்லை என்றும், நான் இருசக்கர வாகனத்திலிருந்து ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்பதற்காக அ.சா.1 எனது மகன் என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதாரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை அடித்திருந்தால் அவர்களின் பெயர்களை நான் மருத்துவரிடம் சொல்லியிருப்பேன் என்றால் மருத்துவரிடம் பெயர்களை சொல்லியுள்ளேன்.

**1,2 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் 3வது எதிரி தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக சொன்னதால் அனுமதி வழங்கப்பட்டது.**

**மறு விசாரணை :** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.